# மதுரை ஹிண்டு பெர்மனெண்டு நிதி லிமிடெட்,


பதிவு அலுவலகம் : 51 - 52, மேலக்கோபுரத் தெரு , மதுரை - 625001. போன் : 0452 - 4377049, 87549 55645

CIN : U65991TN1918PLC001601 G.S.T.No. 33AABCT1316L1ZL E-mail : mduindupermanentfund@gmail.com, fundoffice@tmhpf.com www.tmhpf.com


## 31.03.2023-ம் தேதிய நிதி நிலை அறிக்கை

(ரூ. ஆயிரத்தில்)

| விபரங்கள் | மார்ச் 31, 2023 | மார்ச் 31, 2022 |
|---|---|---|
| I. சமநிலை பங்குகளும் & பொறுப்புகளும் | | |
| பங்குதாரர்களின் நிதி | | |
| (a) பங்கு மூலதனம் | 5742 | 5556 |
| (b) ஒதுக்கீடும், உபரியும் | 64857 | 64137 |
| | 70599 | 69693 |
| நடப்பிலில்லா பொறுப்புகள் | | |
| (a) நீண்டகாலக் கடன் | 388404 | 447192 |
| (b) ஒத்தி வைக்கப்பட்ட வரிவிதிப்பு (நிகர) | 0 | 0 |
| (c) நீண்டகால ஒதுக்கீடுகள் | 12144 | 15243 |
| | 400548 | 462435 |
| நடப்பு பொறுப்புகள்:- | | |
| (a) குறுகிய காலக் கடன் | 307591 | 315041 |
| செலுத்தவேண்டிய வர்த்தகம் சிறு குறு நிறுவனங்களின் மொத்த நிலுவைத்தொகை | 0 | 0 |
| சிறு குறு நிறுவனங்களைத் தவிர மற்ற கடன் வழங்குநர்களின் நிலுவைத்தொகை | 0 | 0 |
| (b) இதர நடப்பு பொறுப்புகள் | 16810 | 15332 |
| (c) குறுகிய கால ஒதுக்கீடுகள் | 14763 | 17893 |
| | 339164 | 348266 |
| மொத்த - சமநிலை பங்குகள் மற்றும் பொறுப்புகள் | 810311 | 880394 |
| II. சொத்துக்கள் | | |
| நடப்பிலில்லா சொத்துக்கள் | | |
| (a) நிலையான சொத்துக்கள் அசையா சொத்து, தளவாடம் மற்றும் உபகரணங்கள் | 58158 | 58593 |
| (b) சொத்துக்களின் மீது ஒத்திவைக்கப்பட்ட வரி (நிகர) | 3702 | 3702 |
| (c) நீண்டகால கடன்களும், முன்பணமும் | 23222 | 30376 |
| (d) இதர நடப்பிலில்லா சொத்துக்கள் | 16013 | 19555 |
| | 101095 | 112226 |
| தற்போதுள்ள நடப்பு சொத்துக்கள் | | |
| (a) நடப்பு முதலீடுகள் | 0 | 0 |
| (b) பணம் மற்றும் பணத்திற்கு இணையானவையும் | 118691 | 128322 |
| (c) குறுகிய கால கடன்களும் மற்றும் முன்பணமும் | 549223 | 591988 |
| (d) இதர நடப்பு சொத்துக்கள் | 41302 | 47858 |
| | 709216 | 768168 |
| மொத்த சொத்துக்கள் | 810311 | 880394 |
| III. நிதிநிலை அறிக்கையுடன் சேர்ந்த குறிப்பு | | |

## 31.03.2023-ம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான லாப - நஷ்டக்கணக்கின் குறிப்பு

(ரூ. ஆயிரத்தில்)

| விபரங்கள் | மார்ச் 31, 2023 | மார்ச் 31, 2022 |
|---|---|---|
| I. அலுவலக செயல்பாட்டின் மூலம் வருமானம் | 83925 | 93143 |
| II. இதர வருமானம் (நிகர) | 6861 | 6757 |
| III. மொத்த வரவு | 90786 | 99900 |
| IV. செலவுகள் | | |
| (a) பணியாளர்களின் ஊதியம் மற்றும் நலனுக்கான செலவுகள் | 34196 | 34102 |
| (b) பணக்கடனுக்குரிய செலவு | 44901 | 52571 |
| (c) இதர செலவுகள் | 9962 | 9706 |
| (d) தேய்மானம் மற்றும் முந்தைய சொத்துக்களின் மதிப்பை தள்ளுபடி செய்த வகையில் செலவு | 1007 | 1069 |
| மொத்த செலவு | 90066 | 97448 |
| V. விதி விலக்கு, அசாதாரண பொருட்கள் மற்றும் வரி முந்தைய லாபம் (III-IV) | 720 | 2452 |
| VI. விதி விலக்கான பொருட்கள் | 0 | 0 |
| VII. வரி மற்றும் அசாதாரண பொருட்களுக்கு முந்தைய லாபம் (V-VI) | 720 | 2452 |
| VIII. அசாதாரண பொருட்கள் | 0 | 0 |
| IX. வரிக்கு முந்தைய லாபம் (VII-VIII) | 720 | 2452 |
| X. வரிச்செலவுகள் | 0 | 0 |
| XI. செயல்பாடுகளின் மூலம் ஏற்படும் லாபம் (நஷ்டம்) (VII - VIII) | 720 | 2452 |
| XII. செயல்பாடுகளை நிறுத்துவதால் ஏற்படும் லாபம் (நஷ்டம்) | 0 | 0 |
| XIII. செயல்பாடுகளை நிறுத்துவதற்கான வரிச்செலவுகள் | 0 | 0 |
| XIV. செயல்பாடுகளை நிறுத்துவதால் ஏற்படும் வரிக்குப்பிந்தைய லாபம் (நஷ்டம்) (XII-XIII) | 0 | 0 |
| XV. நடப்பு வருமானம் (XI + XIV) | 720 | 2452 |
| XVI. சமநிலை பங்குகளுக்கான வருமானம் | | |
| I. அடிப்படை | 0 | 0 |
| II. Diluted | 0 | 0 |
| அலுவலக செயல்பாட்டின் மூலம் பெறப்பட்ட லாபம் / நஷ்டம் | 720 | 2452 |

(ஒப்பம்) **V.வைரவஆனந்தம்** உதவி நிர்வாக அதிகாரி (கணக்கு)

(ஒப்பம்) **L.N.கண்ணன்** கூடுதல் நிர்வாக அதிகாரி (தணிக்கை)

(ஒப்பம்) **K.ரமேஷ்** நிர்வாக அதிகாரி

(ஒப்பம்) **S.கதிரேசன்** சேர்மன்

(ஒப்பம்) **S.ரமேஷ்** துணைச் சேர்மன்

(ஒப்பம்) **M.சுந்தரி** துணைச் சேர்மன்

**இதே தேதிய அறிக்கையை பார்க்கவும்**

இயக்குநர்கள் :

(ஒப்பம்) **R.ராஜராஜேஸ்வரி**

(ஒப்பம்) **S.சந்தானலெட்சுமி**

(ஒப்பம்) **D.வெங்கட்டராமன்**
பட்டயக் கணக்கர்.
உறுப்பினர் எண். 021709
UDIN-23021709BGWPGW9086

இடம் : மதுரை
தேதி : 28.08.2023

## உறுப்பினர்கள்/பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

நிதியின் பங்குதாரர்களின் 129-வது ஆண்டு மகாசபை பொதுக்கூட்டம் 27.09.2023, **புதன்கிழமை** அன்று காலை 10.00 மணிக்கு நிதியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக கதவு எண் 51-52, மேலக் கோபுரத் தெரு, மதுரை-625 001-ல் பின்வரும் அலுவல்களை நிறைவேற்றுவதற்காக வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலமாக நடைபெறும்.

### சாதாரண அலுவல்கள்

1. இயக்குநர்களின் அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட 31.03.2023-ம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை, லாப நஷ்ட கணக்கின் குறிப்பு மற்றும் தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவற்றை அங்கீகரிக்க.
2. இயக்குநர்.திருமதி.R.ராஜராஜேஸ்வரி (இயக்குநர் அடையாள எண்:07269579) அவர்கள் சுழல் முறையில் பதவி விலகிக்கொள்வதால் மேற்படியாரின் பணியிடத்தில் ஒருவரை நியமிக்க,மேற்படியார் தகுதியுடையவராக இருப்பதால் மறுநியமனம் கோருகிறார்.
3. இயக்குநர் Dr.**சுந்தரி**, B.Sc.,M.B.B.S., (இயக்குநர் அடையாள எண்:00228659) அவர்கள் சுழல் முறையில் பதவி விலகிக்கொள்வதால் மேற்படியாரின் பணியிடத்தில் ஒருவரை நியமிக்க, மேற்படியார் தகுதியுடையவராக இருப்பதால் மறுநியமனம் கோருகிறார்.
4. நடப்பு ஆண்டில் சுழற்சி முறையில் ஓய்வு பெறும் இயக்குநர்களின் காலி இடங்களைத் தவிர மத்திய அரசின் அறிவிக்கையின்படி தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெறும் இயக்குநர் ஒருவரின் காலியிடம் மற்றும் கூடுதலாக இரண்டு இயக்குநர்கள் எண்ணிக்கை அதிகரித்து நடப்பு ஆண்டு மகாசபைக்கூட்டத்தில் நியமனம் செய்ய.
5. 2023-2024-ம் ஆண்டிற்கான தணிக்கையாளரை நியமனம் செய்யவும்,அவரின் ஊதியத்தை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக. ஓய்வுபெறும் தணிக்கையாளர் திரு.D.**வெங்கட்டராமன்** தகுதியுடையவராக இருப்பதால் இந்தக்கூட்டத்தின் மூலம் மறு நியமனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இடம் : மதுரை
தேதி : 28.08.2023

இயக்குநர் குழுவின் உத்திரவுப்படி
(ஒப்பம்) **எஸ்.கதிரேசன்**
சேர்மன்

### சிறப்பு அலுவல்கள்:

1.இயக்குநர், திரு.S.கதிரேசன் M.Sc.,B.L.,, அவர்களின் பத்து வருட பதவிக்காலம் நடப்பு மகாசபைக்கூட்டத்துடன் முடிவடைவதால், மேற்படியாரின் ஸ்தானத்தில் புதிதாக ஒரு இயக்குநரை நியமனம் செய்யவும், மற்றும் புதிதாக மேலும் இரண்டு இயக்குநர்களை 25.08.2023-ம் தேதிய போர்டுகூட்டத்தீர்மானத்திற்கிணங்க நியமனம் செய்து தற்போது உள்ள இயக்குநர்கள் எண்ணிக்கையை ஐந்திலிருந்து ஏழாக உயர்த்துவது சம்பந்தமாக.

1)திரு.S.கதிரேசன் M.Sc.,B.L.,,அவர்களின் பத்து ஆண்டுகள் இயக்குநர் சேவையை நிறைவு செய்கிறார். விதி 17(2),நிதிகளுக்கான விதிகள் 2014-ன்படி அவர்களுடைய இயக்குநர் பதவியின் காலம் நடப்பு வருடாந்திர மகாசபைக்கூட்டத்துடன் முடிவடைகிறது. எனவே கம்பெனிச்சட்டம் 2013,பிரிவு 160-ன்படி காலியாகும் மேற்படி ஒரு இயக்குநர் பதவிக்கு மற்றும் மேலும் புதிதாக நியமனம் செய்ய உள்ள இரண்டு இயக்குநர்கள் பதவிக்கு நியமனம் கோரி பெறப்படும் தகுதியான விண்ணப்பங்களுடன் அதற்குரிய காப்புத்தொகை பற்றிய விபரங்கள் மற்றும் பட்டியல் அனைத்தும் வருடாந்திர மகாசபைக்கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல், தேவைப்பட்டால் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வருடாந்திர மகாசபைக்கூட்டத்தில் நடைபெறும்.

இடம் : மதுரை
தேதி : 28.08.2023

இயக்குநர் குழுவின் உத்திரவுப்படி
(ஒப்பம்) **எஸ்.கதிரேசன்**
சேர்மன்

குறிப்பு:-

1. கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 08.04.2020-ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண் 14/2020,05.05.2020-ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண் 20/2020-ன் படி நிறுவனத்தின் எந்தவொரு பங்குதாரரும் தனக்கு பதிலாக பதிலியாக வேறு ஒருவரை நியமனம் செய்து அவர்கள் ஆஜராகி வாக்களிக்கும் வசதி இந்த ஆண்டிற்கான வருடாந்திர மகாசபை கூட்டத்தில் கிடையாது.
2. கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 08.04.2020-ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண்.14/2020,05.05.2020-ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண்.20/2020- மற்றும் 05.05.2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 2/2022ன்படி வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலம் வருடாந்திர மகாசபைக்கூட்டம் கடந்த மூன்று வருடங்களாக நடத்தப்பட்டது. கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகத்தினால் கூடுதலாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 10/2022 தேதி 28.12.2022-ன் பிரகாரம் அனைத்து நிறுவனங்களும் தங்களது வருடாந்திர மகாசபைக்கூட்டத்தினை 30.09.2023-ம் தேதி வரை வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலமாக நடத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டு உள்ளது. அதன்படி,இந்த வருடமும் நமது நிறுவனமானது 129-வது வருடாந்திர மகாசபைக் கூட்டத்தினை வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலமாக மட்டும் நடத்தப்படும். ஆகையால், பங்குதாரர்கள் வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலமாக கலந்து கொள்ளலாம்.
3. பங்குதாரர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரியை நிதியில் பதிவு செய்யாத பட்சத்தில் உடனடியாக தங்களது மின்னஞ்சல் முகவரியை நிதிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. உறுப்பினர்கள், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை பின்பற்றி கூட்டம் தொடங்குவதற்கான அட்டவணை நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்பாக வீடியோ மற்றும் ஆடியோ காணொளி முறையில் 129 வது வருடாந்திர மகாசபைக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான வசதி முதலில் வரும் நபருக்கு முதல் சேவை என்ற அடிப்படையில் வழங்கப்படும். 2% அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், இயக்குநர்கள், நிர்வாக மற்றும் உதவி நிர்வாக அதிகாரிகள், இந்த பணிக்காக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் தணிக்கையாளர்கள் தடையின்றி வருடாந்திர மகாசபைக்கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். முதலில் வரும் நபருக்கு முதல் சேவை என்ற அடிப்படை இவர்களுக்கு பொருந்தாது.
5. வருடாந்திர மகாசபைக்கூட்டத்தில் வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலம் கலந்துகொள்ளும் பங்குதாரர்களின் வருகை நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 103-ன் கீழ் கோரத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படும்.
6. வருடாந்திர மகாசபைக்கூட்டத்திற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் பங்குதாரர்களின் பார்வைக்காக நிறுவனத்தின் இணையதளத்தில் (www.tmhpf.com) வெளியிடப்படும்.
7. வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலமாக நடைபெறும் 129-வது வருடாந்திர மகாசபைக்கூட்டத்தில் ஏதேனும் வினாக்களை எழுப்ப விரும்பும் பங்குதாரர்கள் தங்களது கோரிக்கையை நிதியின் சேர்மன் அல்லது நிர்வாக அதிகாரி அவர்களிடம் கூட்ட தேதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள். வீடியோ மற்றும் ஆடியோ காணொளி காட்சி மூலமாக பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள் கூட்ட தேதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் பதிவு செய்த பங்குதாரர்கள் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். அனுமதி பெற்ற ஒவ்வொரு பங்குதாரருக்கும் நேரம் பற்றாகுறை காரணமாக 3 நிமிடங்கள் மட்டுமே பேச வாய்ப்பு அளிக்கப்படும்.
8. நிதியின் பங்குதாரர்கள் தற்போதைய தங்கள் முகவரி, கைபேசி எண், அஞ்சல் குறியீட்டு எண் உள்ளிட்ட அடையாள அட்டையின் நகல் இ-மெயில் முகவரி ஆகியவைகளை நிதிக்கு அனுப்பி 129-வது வருடாந்திர மகாசபைக்கூட்டத்தின் ஆண்டறிக்கை மற்றும் அதன் சம்பந்தமான குறிப்புகளை தங்களது இ.மெயில் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
9. அ) 23.09.2016-ம் தேதியிட்ட கார்ப்பரேட் விவகார அமைச்சக அறிவிப்பு எண் ஜி.எஸ்.ஆர்.908(இ)ன்படி நிதி நிறுவனங்களுக்கு மின் வாக்களிக்கும் (E.Voting) வசதியை வழங்குவதில் இருந்து விலக்கு அளிக்கபட்டுள்ளது.
   ஆ) 05.06.2015-ம் தேதியிட்ட கார்ப்பரேட் விவகார அமைச்சக அறிவிப்பு எண் ஜி.எஸ்.ஆர் 465(இ)-ன்படி முகமதிப்பில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் அல்லது நிறுவனத்தின் மொத்தம் செலுத்தப்பட்ட பங்குமூலதனத்தில் 1%-க்கும் அதிகமாக பங்கு பெற்றுள்ளவர்கள் இவர்களில் யார் குறைவாக பங்குகள் வைத்துள்ளார்களோ அவர்கள் 129-வது வருடாந்திர ஆண்டறிக்கையை தனித்தனியாக அவர்களது மின்னஞ்சல் முகவரி மூலம் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
10. 129வது வருடாந்திர மகாசபைக்கூட்டம் தொடங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் பங்குதாரர்கள் தங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மூலம் நிதியின் மின்னஞ்சலுக்கு (mduindupermanentfund@gmail.com, fundoffice@tmhpf.com) தங்களது வாக்குகளை செலுத்தலாம்.
11. வீடியோ மற்றும் ஆடியோ காணொளியில் பங்கேற்க விருப்பம் தெரிவிக்கும் பங்குதாரர்கள் தங்கள் கோரிக்கையை நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு (mduindupermanentfund@gmail.com, fundoffice @tmhpf.com) பங்குதாரர்கள் மின்னஞ்சல் மூலம் மகாசபைக்கூட்ட தேதிக்கு பத்து நாட்களுக்கு முன்னதாகவே விண்ணப்பித்து Zoom ID மற்றும் பாஸ்கோடு ஆகியவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. நிறுவனச்சட்டம் 2013, பிரிவு 91-ன்படி நிதியின் உறுப்பினர் சேர்க்கை பதிவேட்டில் 20.09.2023 முதல் 27.09.2023 வரை (இரண்டு தேதிகள்/நாட்கள் உட்பட) உறுப்பினர் சேர்க்கை பதிவு இல்லை என்று அறிவிக்கப்படுகிறது.
13. நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 123 மற்றும் 124-ன் விதிகளின்படி (திருத்தப்பட்டபடி) 7 ஆண்டு காலத்திற்கு உரிமை கோரப்படாத டிவிடெண்ட் மற்றும் முதிர்ந்த வைப்புகள் மத்திய அரசின் "முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி"(IEPF)-க்கு மாற்றப்படும்.
    நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 124 மற்றும் 125-ன்படி "முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி" (IEPF)-க்கு மாற்றப்படாத ஈவுத்தொகை/இணைக்கப்பட்ட ஈவுத்தொகை வாரண்டுகள் மற்றும் உரிமைக்கோரப்படாத முதிர்வடைந்த வைப்பு தொகைகளை பெறாத பங்குதாரர்கள், உடனடியாக பதிவு அலுவலகத்தில் கோரிக்கையை வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
14. நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 160(1)-ன்படி எந்தவொரு உறுப்பினரும் நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்க முன்மொழியப்பட்டால் அவர்/அவள் இயக்குநர் தேர்வு விண்ணப்ப மனுவை இயக்குநர் அடையாள எண்ணுடன் 129-வது வருடாந்திர மகாசபைக்கூட்டத்திற்கு பதினான்கு நாட்களுக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். மேலும் இயக்குநராக நியமிக்க முன்மொழியப்படுபவர் நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 160(1)ன்படி காப்புத் தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நிதியில் செலுத்த வேண்டும். இந்த காப்புத் தொகையை அவர்/அவள் திரும்பப்பெற வேண்டுமெனில் அவர்/அவள் இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் அல்லது மொத்தம் பதிவான வாக்குகளில் செல்லுபடியான வாக்குகளில் 25% வாக்குகள் பெற்றிருக்க வேண்டும்.
15. இயக்குநர் தேர்வுக்கான விண்ணப்பம் சமர்ப்பிப்பதை பொறுத்தவரையில்:-

அ) செல்லுபடியான இயக்குநர் தேர்வுக்கான விண்ணப்பம் அதற்குண்டான காப்புத்தொகையுடன் நிதியில் 08.09.2023 முதல் 13.09.2023 மாலை 5.00 மணி வரை தாக்கல் செய்யலாம்.

ஆ. நிதியில் தாக்கல் செய்யப்பட்ட இயக்குநர் தேர்வுக்கான விண்ணப்பங்கள் திரு.S.கதிரேசன் M.Sc.,B.L.,, மற்றும் திரு.S.ரமேஷ் ஆகியோர்களால் 14.09.2023 பிற்பகல் 3.00 மணிக்கு பரிசீலனை செய்யப்படும்.

இ. 15.09.2023-ம் தேதி மாலை 5.00 மணிக்குள் இயக்குநர் தேர்விற்கான விண்ணப்பங்களை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. இயக்குநர்கள் தேர்வுக்கான வாக்குப்பதிவு தேவைப்படும்பட்சத்தில் 27.09.2023-ம் தேதி மகாசபைக்கூட்டத்தில் பங்குதாரர்கள் தபால் மூலம் அனுப்பிய தபால் வாக்குச்சீட்டுகள் (Postal Ballots) மூலம் இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உ. இயக்குநர்கள் தேர்வுக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக இயக்குநர்கள் தேர்வுக்கான வேட்பாளர்கள் இறுதிப்பட்டியல் தயார் செய்யப்பட்டு அவர்களது பெயர்கள் அடங்கிய தபால் ஓட்டு சீட்டுக்கள் பங்குதாரர்களுக்கு தபால் மூலம் நிதியில் பதிவு செய்துள்ள முகவரிக்கு அனுப்பப்படும். மேற்படி வாக்கு சீட்டுக்களில் தாங்கள் தேர்வு செய்ய விரும்பும் வேட்பாளர்களை (பங்குதாரர்) குறியீடு செய்து கை வாக்கு சீட்டினை இத்துடன் இணைத்துள்ள நிதியின் சுயவிலாசமிட்டு தபால் தலை ஒட்டப்பட்ட உறையில் வைத்து நிதிக்கு 129-வது வருடாந்திர மகாசபைக்கூட்டம் தொடங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு தபால் மூலம் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும்.

இடம் : மதுரை
தேதி : 28.08.2023

இயக்குநர் குழுவின் உத்திரவுப்படி
(ஒப்பம்) **எஸ்.கதிரேசன்**
சேர்மன்